RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s835

# திருவிதாங்கூர் மக்களும் வரிகளும்

பா.ம. ஜெயகலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-629002, தமிழ்நாடு, இந்தியா

# People and Taxes of Travancore

P.M. Jeyakala [a, *]

[a] Department of Tamil, ST Hindu College, Nagercoil-629002, Tamil Nadu, India

* Corresponding Author: jayasthc2039@gmail.com

Received: 14-05-2021
Revised: 29-04-2022
Accepted: 11-05-2022
Published: 21-07-2022

Check for updates

## ABSTRACT

The area known as Travancore covers the districts of Kanyakumari, Thiruvananthapuram, Kollam, Kottayam etc. Here during the monarchy, the society was divided into two major divisions on the basis of religion as Hindus and non-Hindus. In Travancore the tax was to exploit the labor of the people. During the war they levied a war tax called fort money. People pay their taxes to the government to hold weddings and to celebrate festivals like Pongal, Deepavali and Onam. The levy was levied according to the value of the land. The tax was levied by creating systems such as halls, debates, and questions. Trees were also taxed. Apart from the coconut tree, the tax is levied on trees such as Iluppai, Kamuku, Bala, Pinai, Tamarind, Punna and Mango. Grain tax was levied depending on the size of the grain. The house tax Kuppakasa on the house where the people live is derived from the people. Business tax is levied on all occupations that people have been doing. Taxes are levied not only on businesses but also on business equipment. People in the monarchy were fined if they failed to pay taxes. They also pay taxes on the organs in the human body. Head tax is levied on all men between the ages of 16 and 60. Young women from the age of 16 are forced to pay tax on their breast augmentation, also known as breast augmentation. Women also paid thali to wear thali. Taxes were levied on tying turbans and wearing expensive clothing. People pay birth tax on birth and death tax on death. People also pay customs duty, tax on animals, umbrellas, fruits and everything in use.

**Keywords:** Tax, Travancore, Poll Tax, Breast Tax, Land Tax, Lower Caste

## முன்னுரை

வரியானது மக்களின் வாழ்வியலோடு இரண்டற கலந்துள்ளது. வரி என்பது மக்களின் வருவாயிலிருந்து ஒரு பகுதியை அரசு பெறுவது. அரசு பலவகையான முறைகளில் தமது கஜானாவைப் பெருக்கிக் கொள்வது இயல்பு. அவைகளில் ஒன்றே வரி முறை. சங்ககாலம் முதல் தற்காலம் வரை வரியானது எவ்வாறு வசூலிக்கப்பட்டது என்பதை நாம் இலக்கியங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் மூலமாக அறிந்துக்கொள்ள முடிகிறது. திருவிதாங்கூரில் மன்னர் ஆட்சிக் காலத்தில் பொருட்களுக்கு மட்டுமன்று உறுப்புகளுக்கும் வரி வசூலிக்கப்பட்டன. இதனால் திருவிதாங்கூரில் வாழ்ந்த மக்களின் வாழ்கையானது துன்பமிகுந்து காணப்பட்டது. திருவிதாங்கூரில் மக்களிடம் வசூலிக்கப்பட்ட வரிகளை அறிந்துக்கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருவிதாங்கூர்

இந்திய சுதந்திரத்திற்கு முன் திருவிதாங்கூர் என அழைக்கப்பட்ட பகுதி ஐம்பத்தாறு இராஜ்ஜியங்களில் ஒன்றாகும். இது தற்போதுள்ள கன்னியாகுமரி, திருவனந்தபுரம், கொல்லம், கோட்டையம் முதலிய மாவட்டங்களை உள்ளடக்கியது. கண்ணைக் கவரும் எழில்மிக்க நீண்ட நிலப்பரப்பான திருவிதாங்கூர் இந்தியாவின் தென்மேற்குக் கோடியில் அமைந்துள்ளது. மலைகளுக்கும், கடலுக்குமிடையே அமைந்த நிலப்பகுதியான இதனை, பல அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். திருவிதாங்கூரின் வடக்கே கொச்சி மற்றும் கோயம்பத்தூரும், கிழக்கே மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களும், தெற்கே இந்து மகாசமுத்திரமும் மேற்கே அரபிக்கடலும் எல்லைகளாக அமைந்திருந்தன. இப்பகுதி தென்வடக்காக 174 மைல் நீளத்திலும், கிழக்கு மேற்காக 75 மைல் அகலத்திலும் அமைந்திருந்தது. இதன் மொத்தப்பரப்பளவு 7625 சதுரமைல்கள் என அறியமுடிகிறது (Velupillai, 1940). இத்தகைய திருவிதாங்கூரை பல மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர்.

திருவிதாங்கூர் சமுதாயமானது சமயத்தினடிப்படையில் இந்துக்கள், இந்துக்களல்லாதோர் என இருபெரும்பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்துக்களல்லாதோரில் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் பெரும்பான்மையினராக இருந்தனர். இதைத் தவிர ஜைனமதம், புத்தமதம், யூதமதம் ஆகிய மதங்களைச் சேர்ந்தவர்களும் சிறிய அளவில் இருந்தனர். இந்துக்கள் சாதியின் அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். சுமார் 1050 சாதிப்பிரிவுகள் திருவிதாங்கூரில் இருந்ததாக நாகம் அய்யா கூறியுள்ளார் (Nagem, Aiya, 1989). இந்துக்கள் சாதியினடிப்படையில் சவர்ணர்கள் அல்லது மேல்சாதியினர் எனவும், அவர்ணர்கள் அல்லது கீழ்ச்சாதியினர் எனவும் பிரிக்கப்பட்டிருந்தனர். மேல்சாதியினர் சமுதாயத்தில் அனைத்துவித சலுகைகளும் பெற்று உல்லாசவாழ்க்கை வாழ்ந்துள்ளனர் கீழ்ச்சாதியினர் சலுகைகளும் மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு அடிமை வாழ்வு வாழ்ந்துக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் சாதி என்பது ஒருவனது பிறப்பு முதல் இறப்பு வரை அவனது வாழ்க்கை முறையையும், சமுதாயத்தில் அவனுக்குள்ள அந்தஸ்தையும் நிர்ணயிக்கிற விதியாயிருந்தது.

## வரி

தனிமனிதன் வாழ்வு வளம் பெறவும் ஒரு நாடு நலம் பெறவும் பொருள் இன்றியமையாதது. அரசு செயல்பட பொருளாதாரம் மிகவும் அவசியம். அப்பொருளின் சிறப்பைத் திருவள்ளுவர்,

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

என்று கூறியுள்ளார். வருமானமின்றி எந்த அரசும் இயங்காது. நிலையான வருமானத்திற்காக அரசு மக்களிடம் வரியை விதித்து வருமானம் பெறுகின்றது. வரிசெலுத்துபவர் நேரடியாக எந்தப் பலனையோ, நன்மையையோ எதிர்பார்க்காமல் கட்டாயமாக அரசுக்குச் செலுத்துபவை வரி என்று டெய்லர் கூறியுள்ளார் (Kurusamy, 1984). வேளாண்மை பொருளாதார நிலையில் பொதுச்செலவுக்காக விளைச்சலின் ஒரு பகுதியை மக்களிடமிருந்து பெறுகின்ற முறை உருவானது. வாணிபமும், தொழில்களும் வளர்ந்த போது வரி விதிப்பு முறையும் வளர்ந்துப் பலவித வரிகளை அரசு வசூலிக்கத் தொடங்கியது. மக்களின் வருமானத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வரியானது முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது.

## வரியின் பல்வேறு பெயர்கள்

வரியானது பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டதை இலக்கியங்களும் வரலாற்று நூற்களும் கூறுகின்றன. அவை ஆயம், இரவு, இறை, உல்கு, கறை, கொண்டி, திறை (கம்பம்), தெறுபொருள், புரவு என்பனவாகும். குடிகள் மீது விதிக்கபட்டவரி குடிமை எனப்பட்டது. அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிகள் அனைத்திற்கும் குடிமை என்னும் பொதுப்பெயர் வழங்கப்பட்டதாக மா.

இராசமாணிக்கனார் மக்களிடையே வசூலிக்கப்பட்ட சிறுவரிகள் சிற்றாயம், சில்லறை என்ற பெயர்களில் வழங்கி வந்துள்ளன (Rasamanikanar, 1919).

## வரிவசூலின் முறைகள்

சங்ககாலத்தில் வரிவசூல் செய்தவர்கள் காவிதிகள் (வரியிலார்), ஆயக்கணக்கர் என்று அழைக்கப்பட்டனர். காவிதி என்பதற்கு வரி தண்டும் அரசாங்கத்தலைவர் என்பது பொருளாகும். அவருக்குக் கீழ் ஆயக்கணக்கர் என்பவர்கள் வேலை செய்தனர். திருவிதாங்கூர் மன்னர் ஆட்சிக் காலத்தில் வரி வசூல் செய்தவர்கள் தண்டல்காரன், தண்டலர், கணக்காயர், கேள்விக்காரன் என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டனர். தற்காலத்தில் வரி வசூல் செய்பவர்களை அதிகாரிகள், அலுவலர்கள் என்ற பெயர்களில் அழைக்கின்றனர். வரிவசூல் செய்த முறையைத் தமிழ் இலக்கியங்களும் வரலாற்று நூல்களும் தரவுகளைத் தருகின்றன. அரசன் மக்களை துன்புறுத்தாமல் அவர்களின் நிலையறிந்து வரி வசூலிக்க வேண்டும். பழங்காலத்தில் வரியைப் பலமுறைகளில் மக்களிடமிருந்து பெற்றுள்ளனர். அரசாங்கம் வரிக்கெனத் தனிஇலாகாவை அமைத்து, அதற்கான அலுவலரைக் கொண்டு நேரடியாக வசூலித்தது. அரசாங்கத்திற்கும், குடிகளுக்கும் இடையில் ஒரு குழுவினர் இருந்து வரியை வசூலித்தனர். குறிப்பிட்ட நிலப்பகுதியின் வருவாயை ஒருவரிடம் ஒப்படைத்து, அதன் ஒரு பகுதியை அரசாங்கத்திடம் ஆண்டுதோறும் கொடுக்கச் செய்தனர். நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் ஒரு தலைவரிடம் ஒப்படைத்து அவர் மூலம் வரி வசூல் செய்தனர். கிராமங்களில் கிராமத்தலைவரால் வரி வசூலித்து அரசாங்கத்திற்கு அனுப்பபட்டது.

## வரிவசூல் துறைகள்

வரிவசூல் செய்யும் துறைகள் பல சங்ககாலத்தில் செயல்பட்டு வந்தன. நிலவரி வசூலிக்கும் துறை பத்து பிரிவுகளைக் கொண்டிருந்தது. நிலவரித் தொடர்பானவற்றைக் கவனிக்கும் துறை புரவு வரித் திணைக்களம் எனப்பட்டது. வரிக்கணக்கு வைத்துள்ள துறை வரிப்பொத்தகம் எனப்பட்டது. வரிகணக்கைப் பரிசீலனை செய்யும் துறை புரவு வரித்திணைக் களக்கண்காணி எனப்பெயர் பெற்றது. நிலம் பற்றிய அரசு ஆணைகளைச் செப்புப்பட்டயங்களிலும் கல்லிலும் வெட்டுவோர் தனியாக இருந்தனர். இவர்களது துறை முகவெட்டி எனப்பட்டது. நிலத்தை அளந்துப் பார்க்கும்துறை தெரிப்பு என்றும் கொடுத்த பணத்திற்கு இரசீது கொடுக்கும் துறை தரவுசாத்து எனவும் அழைக்கப்பட்டது. பழைய வரிபாக்கிகளைக் கவனிக்கும்துறை பழநியாயம் எனப்பட்டது. வரிப்புத்தகத்தில் வரிகளைப் பதிவுசெய்யும்துறை வரியிலீடு எனப்பட்டது. வரிப்புத்தகத்திலுள்ள கணக்குகளைக் கவனிக்கும் துறை வரிப்புத்தகக்கணக்கு என்றும் அழைக்கப்பட்டுள்ளது. அரசன் ஆணைகளைப் பாதுகாக்கும் துறை பட்டோலை எனவும் நிலவரியானது பலதுறைகளாகப் பிரித்து கவனித்து வரப்பட்டது என மா. இராசமாணிக்கனார் கூறுகின்றார் (Rasamanikanar, 1919).

## திருவிதாங்கூரில் வரிகள்

திருவிதாங்கூரில் மக்களின் உழைப்பைச் சுரண்டுவதாக வரி காணப்பட்டது. நூற்றுக்கதிகமான வரிகள் வசூலிக்கப்பட்டுள்ளன. எதற்கு வரி என்ற வரை முறையின்றி எதற்கெடுத்தாலும் வரியென்ற நிலை நிலவியுள்ளது. அங்கு வாழ்ந்த மக்கள் வரி என்ற பெயரில் தங்கள் செல்வம் அனைத்தையும் இழந்து விட்டு, பசியிலும் பட்டினியிலும் வாழ்நாட்களை கழித்துள்ளனர். இவ்வரியினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் கீழச்சாதி மக்களாவார்கள். அட்டவணை 1 யில் திருவிதாங்கூரில் வழக்கில் இருந்த சொற்கள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

### போர்வரி (கோட்டைப்பணம்)

கோட்டைப்பணம் என்பது கோட்டைக் காவலுக்காக குறிப்பாகப் போர்காலத்தில் விதிக்கப்படுகிற ஒரு தனிவரி ஆகும். கன்னியாகுமரிக்கருகே ஒரு கோட்டை (அரண், மதில்) கட்டுவதற்காக, கொல்லம்

931 முதல் 939 வரை, ஒருகோட்டை நிலத்திற்கு ஐந்துபணம் மேல்வரி விதிக்கப்பட்டதாகக் குறிப்பு உள்ளது. திப்புசுல்தானின் படையெடுப்பின் போது அச்செலவிற்காக வாங்கப்பட்ட கடனைத்தீர்ப்பதற்கு நிலங்களுக்குக் கோட்டை ஒன்றுக்கு ஏழேகால் பணமும் புரையிடங்களுக்கு ஒரு பணக்கடமைக்கு ஏழு பணம் வீதமும் வரிவிதிக்கப்பட்டு, அதனை கொல்லம் 971 கார்த்திகை, மார்கழி, வைகாசி, ஆனி ஆகிய நான்கு மாதங்களாக செலுத்த ஆணையிடப்பட்டதாக தே. வேலப்பன் கூறியுள்ளார் இதன் மூலம் கோட்டைப் பணமான போர்வரியும், அரண்கட்டும் வரியும் வசூலிக்கப்பட்டதை அறியமுடிகின்றது (Velappan, 2000).

அட்டவணை 1. திருவிதாங்கூரில் வழக்கில் இருந்த சொற்கள்

| வ.எ | திருவிதாங்கூரில் வழக்கில் இருந்த சொற்கள் | sவிளக்கம் |
|---|---|---|
| 1 | பணம் | ரூபாய் |
| 2 | அணா | ரூபாயில் பதினாறில் ஒரு பங்கு |
| 3 | கோட்டை | இருபத்தொரு மரக்கால் நெல் அளவு கொண்டது ஒரு கோட்டை |
| 4 | ஏக்கர் | நூறு சென்று நிலம் ஒரு ஏக்கர் |
| 5 | பாட்டம் | நில குத்தகை |
| 6 | சக்கறம் | இருபத்தெட்டு சக்கறம் ஒரு ரூபாய் |
| 7 | காசு | நானூற்றி நாற்பத்தெட்டு காசுகள் ஒரு ரூபாய் |
| 8 | தளை | மரம் ஏறும் போது கால்களில் அணிந்துக் கொள்ளும் பனை அல்லது தென்னை நாரினால் செய்யப்பட்ட வளையம் ஆகும். |

## விழாவரி

மன்னர் எந்த விழாவை நடத்த வேண்டும் என்றாலும் அதற்கு மக்கள் வரிசெலுத்த வேண்டியிருந்தது. அவ்வரி விழாவரி எனப்பட்டது. அரசர் காலத்தில் சாதாரண மக்களால் எந்த விழாவையும் கொண்டாடி மகிழ்ச்சியடைவதற்குப் பொருளாதாரம் காணப்படவில்லை. ஆனால் அரசர்வீட்டுப் பிறந்தநாள் விழாவிற்குச் செலவாகும் பணம் மக்களிடமிருந்து வரியாக வசூலிக்கப்பட்டது. திருமணச்சடங்கை நடத்தும் மக்கள் திருமணவரி செலுத்தினர். அரசர்வீட்டு திருமணத்திற்கு ஆகும் செலவைக் குடிமக்கள் வரியாகச் செலுத்தியுள்ளனர். இதனால் மக்கள் அதிக வேதனையை அனுபவித்தார்களே தவிர எந்த நன்மையும் பெறவில்லை. தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான பொங்கல் பண்டிகையைக் கொண்டாட வரி செலுத்தினர். தீபாவளிபண்டிகை மக்கள் கொண்டாடப்படுகின்ற போதும் மன்னர்கள் வரி வசூலித்துள்ளனர். ஓணப்பண்டிகை என்பது இன்றும் கேரளாவில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்ற மாநில விழாவாகும். இவ்விழாவிற்கான செலவினங்களுக்கும் மக்கள் வரி செலுத்தியுள்ளனர்.

## வாரிசு வரி

மருமக்கள் வழி வாரீசுரிமையைப் பின்பற்றுகிறவர்களில் ஒருவர் நேரடிவாரிசுயின்றி இறந்துப் போனால், இறந்தவரின் அடுத்த வாரிசானவன் அரசுக்கு அடியறா என்ற கட்டணம் செலுத்தி வாரிசுரிமையைப் பெறுவான். இந்தக்கட்டணம் அவனுக்குக் கிடைக்கின்ற சொத்தின் மதிப்பில் நான்கில் ஒரு பகுதியாகும். இதன் மூலம் மக்களிடமிருந்து பெருந்தொகையை அரசுப்பெற்றது. பரம்பரைச்சொத்துக்கு உரிமையுடைய வாரிசுகளிடமிருந்து புருசந்தாரம் என்ற வரி வசூலிக்கப்பட்டது.

இதன்படி சொத்தின் மதிப்பில் நாற்பது சதவிகிதத்திற்கும் அதிகமாக அரசுக்கு வரி செலுத்தப்பட்டது. இந்த வரியை வசூலித்த காரியக்காரர்கள் இதன் ஒருபகுதியைத் தங்களுக்குள் பகிர்ந்துக் கொண்டனர்.

## நிலவரி (கடமை)

திருவிதாங்கூரில் நிலவரியானது முக்கியமான வரிகளில் ஒன்றாக வழக்கில் இருந்தது. வேளாண்மையே அடிப்படைப் பொருளியல் முயற்சியாக இருந்து வருகிற காலத்தில் நிலமே அடிப்படை வரி ஆதாரமாக இருந்துவிடுவது இயல்பு. நிலவரியானது முதலில் தோராயமாக நிலப்பகுதிகளைச் சுற்றிபார்த்து அதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் பிறகு நிலவரியை நிர்ணயிக்கும் அதிகாரி நிலத்தின் அளவு, நிலத்தின் மதிப்பு, நிலவாடகையில் ஏற்படும் வித்தியாசம் இவற்றைக் கணக்கில் கொண்டு வரி நிர்ணயம் செய்தார் குறவர், வேடர் போன்ற மலைசாதியினர் மலைச்சரிவிலுள்ள நிலங்களைப் பயன்படுத்துவதற்கு வரிசெலுத்தியுள்ளனர் (Nagem, Aiya, 1989). பௌடம் (Pautom) என்னும் வரியானது நிலத்தில் இருந்து கிடைக்கக்கூடிய பணத்தில் மூன்றில் இரு பகுதியை அரசுக்குச் செலுத்துவதாகும். மக்கள் துயரத்தில் மூழ்கி காணப்பட்டாலும் தண்டனைக்கு அஞ்சி இவ்வரிகளைக் கட்டியுள்ளனர்.

செழிப்பான, வளமான நிலப்பகுதியான நன்செய்நிலத்தின் வரியைப் பொருளாகவும், பணமாகவும், வசூலித்துள்ளனர். 1877 - இல் திருவிதாங்கூரில் ஒரு ஏக்கர் நிலத்திற்கு வரி இரண்டு ரூபாயும், மலபாரில் இரண்டு ரூபாய் பதினைந்து அணா ஐந்து பைசாவாகவும், திருநெல்வேலியில் ஒன்பது ரூபாய் ஒரு அணா ஐந்து பைசாவாகவும் இருந்துள்ளது. நன்செய் வரியானது வட திருவிதாங்கூரைவிட தென்திருவிதாகூரில் உயர்வாக இருந்துள்ளது. நாஞ்சில் நாட்டில் ஒரு ஏக்கருக்கு முப்பது ரூபாய் வரி வசூலித்துள்ளனர். தாமிரபரணி நதி படுகையில் ஒரு ஏக்கருக்கு இருபது ரூபாய் வரி வசூலிக்கப்பட்டுள்ளன இவ்விதம் வரி வசூலிப்பானது இடத்திற்கு இடம் மாறுப்பட்டு காணப்பட்டது (Nagem, Aiya, 1989).

வயல் நிலங்களுக்கும் வரி வசூலிக்கப்பட்டுள்ளது. வயல் நிலங்களைப் (அரிசி நிலம்) பொறுத்தமட்டில் ஒவ்வொரு நிலத்திலும் விதைக்க தேவைப்படும் விதையின் அளவு, பறை அளவு, நிலத்தின் பரப்பளவு போன்றவற்றை கணக்கிட்டு அதன் அடிப்படையில் வரி நிர்ணக்கப்பட்டுள்ளது (Velupillai, 1940). வயல் நிலத்தில் வசூலிக்கும் வரியைக் கண்டபாட்டம் என்றனர். தோட்டநிலங்களிலிருந்தும், வயல்நிலங்களிலிருந்தும் வசூலிக்கப்படும் ஒருவிதவரி உபரிவரி யாகும். 1864-1865 ஆம் ஆண்டுகளில் நூற்றுக்கு அதிகமான வரிகள் ரத்துச் செய்யபட்டன. எனினும் இருநூறுக்கு அதிகமான உபரிவரிகள் சொத்துக்கள் மீதும் விதிக்கபட்டன. புன்செய் நிலங்களுக்கும் வரி விதிக்கபட்டிருந்தன. அப்புழுதிகளில் பயிறு, எள் முதலியவை விதைக்கபட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், பயிற்றுப்பாட்டம், ஏர்ப்பாட்டம் என தரைவரிக்கும் வேறுமரங்கள் நடப்பட்டிருந்தால் தோட்டகடமைக்கும் ஆளாக்கப்பட்டிருந்தன. எந்தமரம் வளர்க்கப்பட்டாலும் அதற்குத் தரைப்பாட்டம் என்ற வரி வசூலிக்கப்பட்டது.

ரப்பர் பயிரிட்ட நிலப்பகுதிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஆறு ரூபாய், முதல் வருடத்திலும் அதனைத் தொடர்ந்து இரண்டு ரூபாயும் வரியாக நிர்ணயிக்கப்பட்டது. ஏலம் பயிரிடப்படும் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் வீதம், முதல் நான்கு வருடங்களுக்கும், அரசாங்கத்திடம் இருந்து உரிமம் பெற்றபின்னர் வருடத்திற்கு இரண்டு ரூபாய் வீதமும் வரி வசூலிக்கபட்டுள்ளது. அரசாங்கத்தின் அனுமதி பெறாத இடங்களில் ஏலம் பயிரிடும் போது ஆரம்பத்திலிந்தே இரண்டு ரூபாய் வீதம் வரி வசூலிக்கப்பட்டது. 1110 (கொல்லம்) ஆம் ஆண்டு வரி விகிதம் உயர்த்தப்பட்டு ஏக்கருக்கு மூன்று ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. புல் நிலங்களை தவிர பயிரிடப் பதபடுத்தப்பட்ட நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு வருடம் இரண்டு அணா எட்டு பைசா வரி விதிக்கப்பட்டது. இவ்வரி விகிதம் அடுத்த வரி நிர்ணயத்தின் போது மாறுதலுக்கு உட்பட்டது (Velupillai, 1940). இதை போன்று கிராம்பு, காப்பி, தேயிலை போன்ற பொருள்கள் பயிரிடப்படும் நிலங்களுக்கும் வரி வசூலித்தனர். பூங்கா நிலத்திற்கு வரியானது ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் இரண்டு அணா ஒன்பது பைசாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தோட்டநிலத்தில் காணப்படும் மரங்கள் பலன் கொடுக்கவில்லையெனில் மரத்திற்கு வரி இல்லை. ஆனால் அந்நிலத்திற்குத் தரைப்பாட்டவரி வசூலிக்கப்பட்டது. தோவாளை, அகஸ்தீஸ்வரம், இரணியல், கல்குளம், விளவங்கோடு ஆகிய பகுதிகளில் மரத்திற்கும், தரைக்கும் வரி வசூலித்துள்ள செய்தி கிடைத்துள்ளன. வெற்று உலர்நிலங்களில் மரங்கள் இல்லாவிட்டாலும் அதன் விதைப்பாட்டை கணக்கிட்டு வரி வசூலிக்கப்பட்டது. நிலவரி வசூலிப்பதற்காக மண்டபம், வாதுக்கல், கேள்விகள் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

## மரவரி

நிலத்தில் நிற்கும் மரங்களுக்காகச் செலுத்தும் வரி மரவரி எனப்பட்டது. இவ்வரி எல்லாமரங்களுக்கும் வசூலிக்கப்படவில்லை. அதிகப் பலனைக் கொடுத்த தென்னை மரத்தைத் தவிர இலுப்பை, கமுகு, பலா, பனை, புளி, புன்னை, மா போன்ற மரங்களுக்கு வரி வசூலிக்கப்பட்டது. தென்திருவிதாங்கூரில் முதல்தர மரமொன்றுக்கு எட்டுச்சக்கரம் வரையும் அதிகபட்ச கட்டணம் வசூலிக்கபட்டது. வடதிருவிதாங்கூரில் முதல்தர மரத்திற்கு அதிகபட்ச வரியாக நான்கு சக்கறங்கள் வரை மட்டுமே வசூலிக்கப்பட்டது (Nagem, Aiya, 1989). இடத்திற்கு இடம் மாறுபாட்டுடன் வசூலிக்கபட்ட இவ்வரியைப் பாட்டம் என்றும் அழைத்தனர்.

இலுப்பை மரவரியானது, மரம் ஒன்றிற்கு ஒரு சக்கறம் வீதம் வசூலிக்கப்பட்டது. கமுகு மரங்களுக்கு வசூலித்த வரியும் இடத்திற்கு இடம் வேறுபாட்டுடன் காணப்பட்டது. சிறையின்கீழ் (Chirayinkil) தாலுகாவில் கமுகுக்கு எட்டு பணமும் (Eight Cash) ஒரு கமுகுக்கு இத்தனை பாக்கு என்றும் வரி வசூலித்துள்ளனர். சில தாலுகாக்களில் முறையே நாற்பது, முப்பது, இருபத்தைந்து, இருபது, பதினைந்து, பத்து என்று தரம்பிரித்து ஆறுவித வரி வசூலித்துள்ளனர். மரத்தை வெட்டினாலும் வரிவசூலித்துள்ளனர்.

## தானிய வரி

தானியங்களுக்கு வசூலித்த வரி தானியவரி எனப்பட்டது. பயிரிடப்படும் நெல்லிற்குப் பொலிபொன்வரியை அரசுக்குச் செலுத்தினர். நெல்வரியானது, நெல்லின் மதிப்பைக் கணக்கிட்டு பாதிபணமாகவும், மீதி பொருளாகவும் வசூலிக்கப்பட்டது. இவ்வரி நான்கு தவணைகளாகவும், இரண்டு தவணைகளாகவும் நவம்பர், டிசம்பர், ஏப்ரல், மே மாதங்களில் வசூலிக்கப்பட்டுள்ளது. அறுவடை முடிந்தவுடன் அரசாங்கத்திற்கு சேரவேண்டிய நெல்லைப் பெரிய கோணிபைகளில் அடைத்து, கிராமஅலுவலர்களின் கச்சேரி எனப்பட்ட அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

## வீட்டு வரி (குப்பகாச்சா)

மக்கள் குடியிருப்பதற்காக கட்டும் வீட்டின் மீது வசூலிக்கப்படும் வரி வீட்டுவரி எனப்படும். இவ்வரியைக் குப்பகாச்சா என்றனர். ஒரு குடிசைக்கு ஒருபணம் வீதம் வீட்டுவரியானது வசூலிக்கபட்டது (Samuel Mateer, 1871). குடிசைகளின் கூரை, ஓலையால் அமைக்கப்பட்டிருப்பதால் ஆண்டுக்கொருமுறை கூரைமாற்றுதல் வேண்டும். அப்போது அரசுக்கு மனைமேய்ப்பான் கொள்ளும் மிறை என்ற வரிசெலுத்த கீழ்ச்சாதியினருக்கு கட்டளையிருந்தது. எனவே வாழும் வீட்டிற்கு தனியாகவும், கூரைக்கு தனியாகவும் வரிகொடுக்கும் கொடுமைக்கு ஆளாகினர்.

## தொழில் வரி

மக்கள் செய்து வந்த அனைத்து தொழில்களுக்கும் தொழில்வரி கொடுத்துள்ளனர். மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியரிடமிருந்தும் வரி வசூலிக்கப்பட்டது. மனதுக்கு அமைதியைத்தரும் இசையை இசைக்கின்ற கலைஞர்களும் தாம் செய்யும் தொழிலுக்கான வரியைச் செலுத்தியுள்ளனர். துணிகளில் சாயம் ஏற்றுபவர்கள் சாயமேற்ற வரிச் செலுத்தினர். சுமைதூக்கி தன்

வாழ்நாளைக் களிக்கும் சுமைதூக்கும் தொழிலாளிகள் வரிச் செலுத்தியுள்ளனர். ஆயக்கலைகளில் ஒன்றான நாட்டியத்தை ஆடுகின்றவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது. ஏரி, குளங்களில் மீன் பிடிப்பவர்கள் செலுத்திய வரி பாசிப்பாட்டம் எனப்பட்டது. ஆடு, மாடுகளின் உணவான புல்வெட்டும் தொழில் செய்கின்றவர்கள் வரி செலுத்தியுள்ளனர். பொன்வேலை செய்பவர்கள் கொடுக்கும் வரி தட்டாரப்பாட்டம் எனப்பட்டது.

## தொழில்கருவிகளுக்கு வரி

தொழிலுக்கு மட்டும்மின்றி தொழில் செய்யப் பயன்படும் கருவிகளுக்கும் வரி செலுத்தியுள்ளனர். அம்பு, வில் வைத்துக்கொள்ள வரி வசூலிக்கப்பட்டுள்ளது. தறிக்கு தறிவரி செலுத்தியுள்ளனர். எண்ணெய் ஆலைக்குச் செக்கிறை என்ற வரியைச் செலுதியுள்ளனர். கொல்லர்கள் இரும்புக் கருவிகள் செய்ய பயன்படுத்துகின்ற பட்டறைக்கும், பனைத்தொழிலாளி பனை ஏறுவதுக்கு பயன்படுத்திய ஏணிக்கும், மரம் ஏறுபவர்கள் பயன்படுத்திய தளைக்கும் வரி செலுத்தியுள்ளனர். மீன்பிடித்தொழிலைச் செய்ய பயன்படுத்தும் வலைகளுக்கும், கட்டுமரத்திற்கும், படகிற்கும், கப்பலுக்கும் வரி செலுத்தியுள்ளனர்.

## அபராத வரி

மன்னராட்சியில் மக்கள் வரி செலுத்த தவறினால் அவர்களுக்கு அபராதம் விதித்தனர். அவ்விதம் நாடார்கள் மீது அறுபத்து நான்கு வித தண்டவரிகள் விதிக்கப்பட்டதாக சி. உமைதாணு கூறியுள்ளார் (Umaithanu, Kasiudhayam, 2000). தற்போதும் அபராதம் விதிக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

## ஆயம்

வெற்றிலை என்பது கொடிவகையை சார்ந்தது. இதற்காக கொடியாயம் என்ற வரியை வசூலித்தனர். இதை போன்று தென்னை ஓலை, புகையிலை, வாழையிலை இவைகளை பயன்படுத்துவதற்கும் வரி வசூலிக்கப்பட்டது.

## உறுப்புகளுக்கு வரி

இறைவனால் படைக்கப்பட்ட உடலில் உள்ள உறுப்புகளுக்கும் வரி செலுத்தியுள்ளனர். பதினாறு வயது முதல் அறுபது வயது வரையுள்ள எல்லா ஆண்களிடம் இருந்து தலைவரி (தலையிறை) (Poll Tax) வசூலிக்கப்பட்டது. பல வேளைகளில் இறந்தவர்களுக்கும் கூட இந்த வரியை அவர்களின் உறவினர்கள் கொடுக்கவேண்டியிருந்தது. இவ்வரியை செலுத்த முடியாத காரணத்தால் பல குடும்பங்கள் தமிழ்நாட்டிற்கு குடிபெயர்ந்ததாக ஐவிபீட்டர் சமயத்தொண்டர்களும் சமுதாய மறுமலர்ச்சியும் என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். மனிதனின் வளரும் உறுப்புகளில் ஒன்று உரோமம். திருவிதாங்கூரில் தலையில் வளரும் உரோமத்திற்கும், முகத்தில் வளரும் மீசைக்கும் வரி செலுத்தினர். இளம் பெண்கள் பதினாறு வயது முதல் தங்கள் மார்பின் வளர்ச்சிக்கேற்ப வரி செலுத்த கட்டாயப்படுத்தப்பட்டனர். இவ்வரி முப்பத்தைந்து வயது வரை வசூலிக்கப்பட்ட கட்டாய வரியாகும். இவ்வரியை மார்பு வரி (முலைவரி) என்றனர். இவ்வரலாற்றுச் செய்தியினை கு. சுகுமாறன் தனது நூலில் ஆவணப்படுத்தியுள்ளார். ஷெர்த்தலை என்ற இடத்திலுள்ள ஒரு பெண்மணி முலைவரி செலுத்த முடியாததால் தனது மார்பகத்தை வெட்டி வரிவசூலிக்கும் அதிகாரியின் முன் எறிந்து விட்டு தன் உயிரை மாய்த்துக்கொண்டதால் அந்த இடம் முலச்சிபறம்பு எனப்படுகிறது உறுப்புகளுக்கும் வரிசெலுத்திய கொடுமையை அறியமுடிகிறது (Mitra, 1979).

### தாலியிறை

திருமணம் ஆன ஒவ்வொரு பெண்ணும் தாலியை அணிவதற்கு தாலியிறை செலுத்தினர். கீழச் சாதியினர் அணிகலன்கள் அணிய ஆபரண வரியை செலுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது.

### தலைப்பாகை கட்ட வரி

ஆண்கள் திருமணம், பூப்பு போன்ற நிகழ்ச்சிகளில் தலையை சுற்றி கட்டும் தலைப்பாகைக்கும் வரி கட்டவேண்டி இருந்தது. விலை உயர்ந்த ஆடை அணிவதற்கும் வரி செலுத்தினர்.

### பிறப்பு இறப்பு வரி

ஒரு குழந்தை பிறந்ததும் பிறப்பு வரி செலுத்தினர். ஒருவர் மரணம் அடைந்துவிட்டால் அவரை அடக்கவோ, எரிக்கவோ அரசின் உரிமை பெற வேண்டும். அப்போது இறப்பு வரி செலுத்தினர்.

### சுங்க வரி

ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுசெல்லும் போது, ஒவ்வொரு எல்லைப் பகுதிகளிலும் சவுக்கிகள் என்ற சுங்கவரி அலுவலகம் அமைத்து அரசாங்கம் சுங்க வரியை வசூலித்தது. திருவிதாங்கூரில் முப்பத்திரண்டு சவுக்கிகள், சவுக்கிதார் என்ற அதிகாரியின் கீழ் இருந்துள்ளது. உப்பு, அபினி தவிர மற்ற பொருட்கள் அனைத்தையும் எவ்வித கட்டுபாடின்றி ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் அரசு அனுமதித்திருந்தது.

### விலங்குகளுக்கான வரி

மக்களிடமிருந்து விலங்குகளுக்காக வரி வசூலிக்கப்பட்டது. கால்நடைகளுக்கு வரி வசூலிக்கப்பட்டதை ஆட்டுப்பாட்டம் என்றனர். போர்காலங்களில் போருக்கு தேவையான யானைகளைப் பராமரிப்பதற்கு மக்களிடமிருந்து யானை வரி அல்லது ஆனை வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

### பிற வரி

திருவிதாங்கூரில் வாழ்ந்த மக்கள் தான் பயன்படுத்திய பொருட்களுக்கும் வரி செலுத்தியுள்ளனர். காய்கறி, உப்பு, கள், முத்திரைதாள் இவற்றிற்கும் வரி செலுத்தினர். பொது குளம், ஆறு, ஏரிகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தியதற்காக தண்ணீர் வரி அல்லது தண்ணீர் பணம் வசூலிக்கப்பட்டது. குடை, நெய், பழங்கள் பயன்படுத்துவதற்கும் வரி வசூலிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் எதற்கு வரி என்று இல்லாமல் எல்லாவற்றிற்கும் மக்கள் வரி செலுத்தியுள்ளனர்.

## முடிவுரை

திருவிதாங்கூர் மன்னராட்சி காலத்தில் மக்களிடமிருந்து ஏராளமான வரிகள் வசூலிக்கப்பட்டுள்ளன. வரியானது இலக்கியங்களில் ஆயம், இரவு, இறை, உல்கு, கறை, கொண்டி, திறை (கப்பம்), தெறுபொருள், புரவு, குடிமை என்னும் பல பெயர்களில் இடம் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் பொருளாதாரம் இன்றியமையாத ஒன்றாகும். அப்பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக வரி வசூலிக்கப்பட்டது. வரிவசூலிப்பவர்களை காவிதிகள், ஆயக்கணக்கர், தண்டல் காரன், தண்டலர், கணக்காயர், கேள்விக்காரன் என்பன போன்ற பெயர்களில் அழைத்துள்ளனர். திருவிதாங்கூரில் வரியானது மக்கள் உழைப்பின் ஒரு பகுதியாக இல்லாமல் கூடுதலாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வரியினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கீழ்ச்சாதி மக்களாவார்கள். மக்கள் தங்கள் உறுப்பு முதல் பயன்படுத்திய அனைத்திற்கும் வரி செலுத்த கட்டாயப் படுத்தப்பட்டிருந்தனர். இதனால் அவர்களின் வாழ்க்கையானது இன்னல் மிகுந்ததாகவே காணப்பட்டது. வரி செலுத்த தவறியவர் கடுமையான தண்டனைகளை அனுபவித்தனர். கீழ்ச்சாதி மக்கள் சமூகத்தில்

புறக்கணிக்கப்படுவதாலும், பொருளாதாரம் சுரண்டப்படுவதாலும் மனம் மட்டுமின்றி உடல் நிலையும் பாதிப்படைந்தனர்.

## References

Kurusamy, M.P., (1984) Pothunithi, Kuru. Themozhy, Thiruchenthoor, India.

Mitra, C.R., (1979) Sree Narayana Guru and Social Revolution, Sheertallai, India.

Nagem Aiya, V., (1989) The Travancore State Manual Vol II, III, Asian Educational Services, New Delhi, India.

Rasamanikanar, M., (1919) ThamizhakaAatchi, Pari Nilaiyam, Chennai, India.

Samuel Mateer, (1871) The Land of Charity, Methuen & Co- Limited, London, UK.

Umaithanu, C., Kasiudhayam, P., (2003) BakavanVaikundaswamykalVaralaru, ThanikkaiArtprinter, Chennai, India.

Velappan, T., (2000) Nanjilnadu, Bharathi Prees, Nagercoil, India.

Velupillai, T.K., (1940) The Travancore State Manual, Vol I, III, The Government of Travancore, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License